குழந்தைகளின் வாரப் பத்திரிகை

அணில்

மலர் 5
இதழ் 1
ஏப்ரல் 7.
1950

வெள்ளிதோறும் ★ ஆசிரியர்: வை. கோவிந்தன் ★ அணு ஒன்று

சுண்டெலியால் வந்த ஸ்ட்ரைக்

நியூ ஜெர்ஸியிலுள்ள பேப்பர் மில்லில் ஒரு சுண்டெலி ஓடியது. தொழிலாளி ஒருவன் பார்த்து பயந்தான். சுண்டெலியையே பார்த்துக் கொண்டிருந்தான். வேலையைக் கவனிக்கவில்லை. அவன் தன் வேலையைக் கவனிக்காததால் காகிதம் தாறுமாறாக கிழிந்து அங்குமிங்குமாக உருளைகளில் மாட்டிக்கொண்டு காகித மில்லே அல்லோல கல்லோலமாகிவிட்டது. கவனிக்காததற்காக முதலாளிகள் அந்தத் தொழிலாளியை வேலையை விட்டு நீக்கினர். அந்த மில்லில் வேலை செய்யும் மற்ற 500 பேர்களும் தொழிலாளியிடம் அனுதாபம் காண்பிப்பதற்காக வேலைக்குச்செல்ல மறுத்து விட்டனர்.

கடிகாரக் கோழி முட்டை

ஸ்மித்னுக் எனும் இடத்தில் ஒரு கோழி முட்டை இட்டது. அந்த முட்டையிலே கெடிகாரம் மாதிரி 12 குறிகள் இருந்தன.!

கோயிலுக்குப் போகும்படி தீர்ப்பு

ஒருவன் தன்னுடைய மனைவியை அறைந்தான், மகனையும் அடித்தான். அதற்காக அவனை அவன் மனைவியுடன் நாலு நாட்கள், தினம் கோயிலுக்குப் போகும்படி ஜட்ஜ் தீர்ப்பளித்தார்.

நடுராத்திரி அபாயம்

பிரிட்டோரியியாவில் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரு அவசர் செய்தி வந்தது. 'என்னுடைய பணப்பெட்டியைத் திருடர்கள் திருடிவிட்டார்கள். பெட்டியிலே மூன்று பென்ஸ் இருந்தன.'

அடுத்த வாரம்

பர்மாவில் ஜப்பானியக் குண்டு பட பட படார்! புறப்பட்டார்கள் இந்திய மக்கள். இந்தியாவுக்குத்தான். கப்பல் தான் இல்லையே தரை மார்க்கமாக வந்தார்கள். படத்திலுள்ள மூன்று பேர்களும் ஊர் வந்து சேர்ந்தார்களா? அடுத்த வாரம் அணிலில் ஒரு கதை வெளியாகிறது. படித்தால் இந்த மூன்று பேர்களையும் நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

அணில்

1950ஆ ஏப்ரலீ 7உ வெள்ளிக்கிழமை

தங்கைகளே, தம்பிகளே!

மறுபடியும் அணில் வாரப் பதிப்பாக வெளி வருகிறது. பல ஊர்களிலிருந்து 'அண்ணா நாலணா கொடுத்து அணில் வாங்கமுடியவில்லையே, ஒரு அணாவாக ஆக்கினால் தான் எங்களால் வாங்க முடியும்' என்று கடிதம் எழுதிவிட்டார்கள். பார்த்தேன். 'சரி, தங்கைகள் தம்பிகளுக்காக மாதப் பத்திரிகைகள்தான் நிறைய வெளியாகின்றன. வாரப் பத்திரிகைகள் இல்லையே, மறுபடியும் அணிலை வாரப்பத்திரிகையாகவே வெளியிடுவது' என்று தீர்மானித்தேன். இனிமேல் அணில் வெள்ளிக்கிழமை தோறும் கிடைக்கும்.

இரண்டாவது எழுத்தறிவுப் போட்டியில் யாரும் பரிசு பெறவில்லை. மூன்றாவது எழுத்தறிவுப் போட்டியில் பரிசு பெற்றவர் விபரம் வேறு பக்கத்தில இருக்கிறது. நாலாவது எழுத்தறிவுப் பரிசுப் போட்டி அடுத்த இதழில் வெளியாகிறது. பரிசு ரூ. 25. அடுத்த இதழுக்கு இப்பொழுதே சொல்லி வைத்து விடுங்கள்.

அடுத்தவாரம் புலிக்குட்டி வீரன் கதைப் புத்தகம் வெளி வருகிறது. விலை ஓரணா. உங்கள் ஊர் அணில் விற்பனையாளரிடம் கிடைக்கும். அப்பாவின் சொல்லைக் கேட்காத மகன் என்னென்ன பாடுபடுகிறான். அந்த மகன் தான் புலிக்குட்டிவீரன்.

* * * * * * *

நான் பேசுகிறேன்

* * * * * * *

பாகிஸ்தான் பிரதம மந்திரி லியாகத் அலிகான் டெல்லிக்கு வந்திருக்கிறார். பாகிஸ்தானுக்கும்—இந்தியாவுக்கும் உள்ள தகராறுகளைத் தீர்த்துக்கொள்வதற்காகத் தான் லியாகத் அலிகான் வந்திருக்கிறார். பேச்சுவார்த்தை நடைபெறுகிறது....1951-ம் ஆ பிப்ரவரி மாதம் 9-ந்தேதி முதல் மார்ச் 1-ந் தேதிவரை ஜனசங்கியைக் கணக்கு எடுக்கப்படும் என்று மந்திரி டாக்டர் ராஜன் மேல் சபையில் சொன்னார்....இந்தியாவின் காட்டுச் செல்வம் அழியாமல் பாதுகாக்கப் புதிதாகக் காடுகள் வளர்க்க வேண்டும், என்று டேராடூன் வன ஆராய்ச்சிக் கலாசாலை பட்டமளிப்பு விழாவில் நமது உதவிப் பிரதமர் வல்லபாய் படேல் கூறினார். 'உள்நாட்டு தந்திகளின் கட்டண விகிதங்கள், சாதாரண தந்திகளுக்கு ஒரு அணா குறைவாகவும், எக்ஸ்பிரஸ் தந்திகளுக்கு 2 அணா குறைவாகவும் இருக்கும். சாதாரண தந்திகளுக்கு விலாசம் உட்பட குறைந்த பட்சம் 8 வார்த்தைகளுக்கு 8 அணா வீதம 8வார்த்தைகளுக்குமேல் அடுத்த வார்த்தைக்கு ஒரு அணா வீதமும் எப்ரல் 1-ந் தேதி முதல் கட்டணம் வசூலிக்கப்படும் என்று தந்தி இலாகா டைரெக்டர் ஜெனரல் அறிவிக்கிறார். உலகத்திலேயே நீச்சுப் போட்டியில் வீரர் யார் தெரியுமா? ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜான் மார்ஷல்-அமெரிக்கா எல் யுனிவர்ஸிடியில் நடந்த நீச்சுப் போட்டியில் குறைந்த நேரத்தில் அதிக தூரம் நீந்தியவர் இவர்தான். இந்தியாவுக்கு ஒரு லட்சம் சைக்கிள்கள் அந்நிய நாடுகளிலிருந்து 1950 ஜூன் மாதத்திற்குள் வரப் போகிறது.

●

எழுத்தறிவு இலவசப்போட்டி-3
போட்டி முடிவு : பரிசு ரூ. 25

சரியான விடை:—(1) விகடகவி (2) வினைச்சொல், (3) விருத்தம், (4) விஜயவாடா, (5) விகல்பம்.

பரிசு பெற்றவர்கள்:—(1) A. முத்துவீரப்பன், அடையார், (2) N. அன்புக்கிளி, காரைக்குடி, (3) கி. ராமகிருஷ்ணன், சமூகரெங்கபுரம், (4) லெ. விஸ்வநாதன், திருநெல்வேலி, (5) டி. சாம்பசிவம், விக்ரமம், (6) R. ராதாகிருஷ்ணன், சமூகரெங்கபுரம், (7) A. அமீர்க்கான், பண்ருட்டி, (8) மு. ஆறுமுகம், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை, (9) K. ரெங்கநாதன், திருவல்லிக்கேணி, (10) நா. சீதாராமன், மஞ்சகுப்பம் கூடலூர், (11) P. C. ஜெயராமன், திருப்பூர், (12) T. ஸ்ரீனிவாசன், பிளமேடு, (13) B. V. சௌந்தரம், பவானி, (14) D. மனமோகன், கோயமுத்தூர், (15) ச. கோட்டைராஜ், வத்தலக்குண்டு, (16) அ. சந்திரசேகரன், மஞ்சக்குப்பம், கடலூர், (17) அப்துல் முனாப், செங்கம், (16) N. S. K. கிட்டப்பா, ஸ்ரீரங்கம்.

பரிசு ஈவு :—பரிசுத் தொகை ரூ. 25-யும், பரிசு பெற்ற நபர் 18-க்கு மணியார்டர் கமிஷன் நீக்கி, ஆள் ஒன்றுக்கு ஈவு ரூ. 1-4-0 வீதம் அனுப்பித்தரப்படும்.

எழுத்தறிவு இலவசப் பரிசு போட்டி—2
முடிவு விபரம்

சரியான விடை:— (1) மூத்திரிலைக. (2) புத்திரர், (3) பாத்திரம், (4) மத்திமம், (5) நாஸ்திகர்.

குறிப்பு :—போட்டியில் 65-பேர் கலந்து கொண்டிருக்கிறார்கள். ஒருவர் கூட சரியான விடை எழுதவில்லை. ஒரு பிழை இருந்தால் அதற்குப் பரிசு கொடுக்கலாம் என்று எண்ணினேன். ஆனால் பல பிழைகள் இருந்தன. அதனால் இந்தப் பரிசை யாருக்கும் கொடுக்க முடியவில்லை. —(அ. அ.)

சர்க்கஸ் யானை

திருமயம் எஸ். நடராஜன்

வீதியில் ஒரே கூட்டம். மாலை நேரம். பள்ளிக்கூடம் அப்பொழுது தான் விட்டார்கள். "டட்டு ...டட...டட், டட்டு...டட...டட்" என்று டிரம் சத்தம். சர்க்கஸ் பாண்டு வாத்தியம் ஜமாய்க்கிறது. பையன்கள் எல்லாரும் "டேய் சர்க்கஸ் வந்திருக்கிடா, சர்க்கஸ்!" என்று வேடிக்கை பார்க்க ஓடுகிறார்கள். கூட்டங் கூட்டமாய் ஓடுகிறார்கள்.

மதுரை. அதற்குப் பக்கத்தில் பெரிய மைதானம். அங்கே பெரிய சர்க்கஸ் டென்ட் அடித்துக்கொண்டிருக்கிறார்கள். அதை வேடிக்கை பார்க்கத்தான் இத்தனைக் கூட்டமும். யானைகள், குதிரைகள், நாய்கள், குரங்குகள், ஒட்டகை, சிங்கம், புலி, கரடி எல்லா மிருகங்களும் வந்திருக்கின்றன.

ஞாயிற்றுக்கிழமை சர்க்கஸ் ஆரம்பம். இரண்டு காட்சிகள். டவுனில் வீதியெல்லாம் நோட்டீஸ் பறக்கிறது. பாண்டு வாத்தியத்துடன்! ஹார்னிமன் சர்க்கஸ் என்றால் சொல்லவா வேண்டும்? அதைப் பார்க்க பலர் ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கசும் வந்துவிட்டது! ஞாயிற்றுக்கிழமைக் காலை. டவுனில் முக்கிய வீதிகள் வழியே எல்லா மிருகங்களும் வருகின்றன. ஒன்றுக்குப் பின் ஒன்றாய் வருகின்றன. சர்க்கஸ் மானேஜரும், பயில்வான்களும் முன்னே செல்லுகிறார்கள். இதைப் பார்க்க வழி நெடுக ஜனத்திரள்! ஒரே கூட்டம். சிறுவர்களின் கூட்டம் ஒன்று மிருகங்களுக்குப் பின்னால் வருகிறது.

பையன்கள் யானைகளையே சுற்றுகிறார்கள். அது அசைவதும், காலையும், துதிக்கையையும் ஆட்டுவதும் அவர்களுக்கு வேடிக்கையாய் இருக்கிறது. யானைக்குப் பக்கத்தில் நெருங்கவோ பயம். கொஞ்சநேரம் ஆனது. கிட்டப் போய் யானையின் முதுகைத் தொடுகிறார்கள். வாலைத் தொடுகிறார்கள். வாழைப் பழங்கள், கரும்புத் தோகை, தேங்காய் மூடிகளைக் கொடுக்கிறார்கள். இரண்டு யானைகள். பெரி[illegible]து, அம்மா [illegible]னை; பாப்பா யானை. அம்மா யானைக்குப் பெயர், கோமதி. மகள் யானைக்குப் பெயர், பார்வதி. குட்டி யானை பார்வதி, கொஞ்சம் சுட்டி. விஷமம் செய்யும். ஆனாலும் புத்திசாலி. அம்மா யானை என்ன சொன்னாலும், அப்படியே கேட்கும். செய்யச் சொல்வதைச் செய்யும். பையன்கள் கோமதி அம்மாவுக்குத் தேங்காய், பழம், கரும்பு எல்லாம் கொடுத்தார்கள் அல்லவா? அதை வாங்கி வாங்கி, மகளுக்குக் கொடுக்கிறது. மகள் பார்வதி, என்ன செய்கிறாள் தெரியுமா? வேடிக்கைக்காக, பையன்கள் சட்டையைப் பிடித்திழுக்கிறாள். பையன்களுக்கும் யானைகளிடம் பயம் தெளிந்துபோய் விட்டது. வீதியில் வரும்போதே, பாப்பா பார்வதி என்னசெய்கிறது தெரியுமா? தெருவில்படுத்துஉருளுகிறது. மண்ணை வாரித் தலையில் போட்டுக்கொள்ளுகிறது. துதிக்கையால் தண்ணீரை இழுத்து, கூட்டத்தில் பீச்சி அடிக்கிறது. ஊர்வலம் முடிந்தது. எல்லா மிருகங்களும் கூடாரத்துக்குப் போய்ச் சேர்ந்தன.

சர்க்கஸ் முதல் ஆட்டம் பகல் 2-மணிக்கு ஆரம்பித்தது. இந்த மாட்டினி ஷோ முக்கியமாய் பள்ளிக்கூடப் பையன்களுக்காக வைத்தது. சர்க்கஸ் டென்டில் ஏகக் கூட்டம். பெரும்பாலும் பையன்களே வந்திருந்தார்கள். ஒவ்வொருவரும் ஆட்ட நேரத்தில் மிருகங்களுக்கு இனம் கொடுக்க, கரும்புத் துண்டுகள், பழங்கள், எல்லாம்கொண்டு வந்திருந்தார்கள். பாப்பா யானை பார்வதிக்கு பகல் ஆட்டந்தான் ரொம்பப் பிடிக்கும். காரணம் தெரியுமா? அது காட்டும் வேடிக்கைகளைப்பார்த்து பையன்கள் கை தட்டுவார்கள். சந்தோஷத்தில் கூச்சலிடுவார்கள். கரும்புத் துண்டுகளை அதன் மேல் எறிவார்கள்.



தாய், கோமதி யானை, ந[illegible]ருகப் பந்து விளையாடும். குட்டிக்கர்ணம் போடும். சைக்கிள் ஓட்டும் முன்னங்கால்களை மடக்கி மண்டியிட்டுக் கொள்ளும். சலாம் செய்யும். டிரம் அடிக்கும். பெஞ்சியில் உட்காரும். இந்த வித்தைகளை எல்லாம் அன்றைக்குச் செய்து காட்டியது. கூட்டத்தில் ஒரே சந்தோஷம். கை தட்டல். "சபாஷ்! கோமதி!" என்றார்கள், வாண்டுப் பையன்கள். தாயார் செய்யும் வித்தைகளை, மகளும் செய்கிறது. ஒரு சிறு டென்னிஸ் பந்து. அதை பாப்பா பார்வதி, துதிக்கையால் எடுத்தது. தாய் மேல் எறிந்தது. தாய் அந்தப் பந்தை பிடித்தது. இப்படியே மாற்றி மாற்றி, இரண்டு யானைகளும் பந்து விளையாடுகின்றன. வேடிக்கை பார்க்கவந்த பையன்கள் சடசடவென்று கை தட்டுகிறார்கள். யானைகள் இரண்டும் அவர்களை மண்டி போட்டு வணங்குகின்றன.

பிறகு, இந்த யானைகள், ஒரு பெஞ்சியில் உட்கார்ந்தன. ராஜா ராணி மாதிரி இருந்தன. இவற்றிற்கு முன்னால் வேறு மிருகங்கள் வேடிக்கை காட்டுகின்றன. குரங்குகள், கால்சட்டை, கோட், தொப்பி போட்டுக்கொண்டு, சிப்பாய்களைப்போல் தாமபுக்கயிற்றில் நடக்கின்றன. நாய்க்குட்டிகள் புட்பால் விளையாடின.

தொடரும்



தொடர்கதை

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஏந்த இடத்தில் அலுப்பாறினேனே அங்கேயே மாலைவரை இருந்தேன். களைப்புத் தீர்ந்தது. இருந்தாலும் ஒரு பயம். இந்தத் தீவோ ஒரே அனைந்தரக் காடாக இருக்கிறது. என்னைச் சுற்றிலும் ஒரே மரக்காடுகள். அழகாகத்தான் இருக்கிறது. ரம்மியமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் நான் மட்டும் தனியாக இருக்கிறேன். இருட்டிவிட்டது. படுத்தேன் அங்கேயே, தூங்கப் பார்த்தேன். தூக்கம் வரவில்லை. கொஞ்சம் தூக்கம்வரும் சமயத்தில் பயங்கரமான எண்ணங்களும், சொப்பனங்களும் என்னைத் தூங்கவிடவில்லை. விடியும்வரை இதே தொல்லைதான். விடிந்தது. என்னுடைய வழக்கப்படி அந்தத் தீவைச் சுற்றலாமென எண்ணினேன். எழுந்தேன், நடந்தேன். கொஞ்சதூரம் நடந்திருப்பேன். சற்று தூரத்திலே ஒரு நீரோடைக் கரையிலே ஒரு கிழவன் உட்கார்ந்திருந்தான். தலையிலே துணியை மூடியிருந்தான். சரி இவனும் உடைந்த கப்பலின் மாலுமி என நினைத்தேன்.

அந்தக்கிழவனிடம் போனேன். வாழ்த்தினேன். அவன் வாயால் பதில் சொல்லாமல் ஜாடையால் பதில் சொன்னான். உடனே 'ஐயா பெரியவரே இங்கு எப்படி வந்தீர்கள்?' என்றேன். பதில் சொல்லாமல் தலையாட்டிக்கொண்டே 'என்னை நீ தோளில் தூக்கிக்கொண்டு இந்த நீரோடையைத் தாண்டிப்போகவேண்டு'மென்று சொல்வதுபோல ரொம்பவும் வருத்தத்துடன் ஜாடை காண்பித்தான். உடனே நான் 'கடலோடியே நீ ஒரு நல்ல காரியத்தைச் செய்யப்போகிறாய்' என்று சொல்லிக்கொண்டேன். பிறகு கீழே குனிந்துகொண்டேன். கிழவன் என் தோளில் ஏறிக்கொண்டான். ஏறிக்கொண்டதும் என் கழுத்தை அவன் கால்களால் பின்னிக்கொண்டான். எழுந்தேன், நடந்தேன். கால்களால் என் கழுத்தை நெரித்தான். வலி தாங்கமுடியவில்லை. எங்கிருந்து அவனுக்கு இத்தனை பலம் வந்ததோ? ஒரு இடத்திலே குனியும்படி சொன்னான். குனிந்தேன். குனிந்தபடியே 'பெரியவரே மெதுவாக இறங்கிவிடுங்கள்' என்றேன். இறங்கவில்லை, இறங்காமல் மேலும் தன் பலத்தை எல்

ஐந்தாவது பிரயாணம்

லாம் கொண்டு என் கழுத்தை கால்களால் நெரித்தான்.

எனக்கு ஆச்சரியமாகிவிட்டது. பிறகு என் நெஞ்சிலே கிடக்கும் அவனுடைய கால்களைத் தடவிப் பார்த்தேன். கறுப்பாகவும், முறமுறப்பாகவும், தடிப்பாகவும் எருமைத் தோல் போலவும் இருந்தது. எனக்கு பயம் அதிகமாகிவிட்டது. அந்தக் கிழட்டுப் பயலைக் குப்புறத் தள்ள முயன்றேன். அதற்கு பதிலாக மேலும் என் கழுத்தை நெரித்தான். எனக்கும் பாதி உயிர் போய்விட்டது. கண் அடைத்தது. அவனைக் கீழே தள்ள முயற்சி செய்து தொபீரென்று கீழே விழுந்து விட்டேன். ரொம்ப நேரஞ்சென்று என் நினைவு வந்தது.

இன்னும் என் கழுத்தை நெரித்துக்கொண்டேதான் இருக்கிறான் கிழவன். கொஞ்சம் கால்களை நெகிழ்த்துக்கொண்டுதான் இருந்தான். எனக்கு மூச்சு இருக்கிறது என்பதை அறிந்ததும் அவன் என் வயிற்றிலே கால்களால் அடித்தான். மறுபடியும் கழுத்தை நெரித்து 'சரி மாத்தடிப் பக்கம் போ' என்று ஜாடை காண்பித்தான். அவன் சொன்னபடியே போனேன். சாவகாசமாகப் பழங்களைப் பறித்தான், தின்றான். சில இடங்களில் அவன் சொல்லாமலே நிற்பேன், அவன் நிற்கச் சொன்னால் ஓடுவேன். அவன் சொன்னபடி நான் கேட்கும் வரையில் என்னைக் குத்துவான். இப்படியே நாள் பூராவும் நடந்தது. மிருகத்துக்கும் கேடாகிவிட்டேன். இருட்டியது. கீழே உட்காரச் சொன்னான். உட்கார்ந்தேன். கழுத்தைவிட்டு இறங்கவில்லை. இறங்காமலே தூங்க ஆரம்பித்தான். தூங்கிவிட்டான். காலையிலே கால்களால் என் வயிற்றிலே உதைந்து என்னை எழுப்பி எழுந்திருக்கச் செய்தான் முன்தினம் போலவே. நாள் பூராவும் தோளிலே உட்கார்ந்து கழுத்தை நெரிக்கினான். மூத்திரம், மலமெல்லாம் என் உடம்பிலே கழித்தான். நான் அவன் சொல்லுவதுபோல் செய்யாவிட்டால் வயிற்றிலே கால்களால் உதைப்பான். இதுபோன்ற கஷ்டங்களை நான் எந்தக் காலத்திலும் அனுபவித்ததில்லை. அவனோ நல்ல காளைப் பருவமுடையவனாகவும், கழுதை மேய்ப்பவனுக்கு இருக்கும் கொடூர மனமும் உடையவனாக இருக்கிறான். இப்படியே அடிமையாக இருப்பதைக் காட்டிலும் செத்துப் போகலாமென எண்ணினேன்.

இப்படியே பல வாரங்கள் ஊழியம் செய்தேன். அங்கங்கே சில கொடிகளில் திராட்சைப் பழங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. இவைகளைப் பார்த்தேன் ஒரு நாள். அன்று தினமே ஒரு பெரிய சுரைக்காயைப் பார்த்தேன். முற்றியிருந்தது. அதைப் பறித்தேன் பழங்களைப் பிழிந்து அதிலே ஊற்றி வைக்கலாமென்று கையிலே சாற்றைப் பிழிந்தேன். கொண்டு போனேன். பழங்களைப் பறித்தேன். சுரக் குடுக்கையிலே குடுக்கைக் கையிலே வைத்துக்கொண்டேன். திராட்சை ரசத்தை, அடிக்கடி குடிப்பேன். கொஞ்சம் பலம் அதிகமாகியது. கிழவனை சுமந்துகொண்டே ஓடினேன். பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் ஓடினேன். சில சமயங்களில் சிரித்துக்கொண்டும், ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டுமே ஓடினேன்.

கிழவன் பார்த்தான். எனக்கு இரண்டு மடங்கு பலம் உண்டாகி கஷ்டமில்லாமல் அவனைத் தூக்கிப் போவதைப் பார்த்து ஆச்சரியமடைந்தான். பிறகு சுரக் குடுக்கையைக் கேட்டான். நான் கொடுக்கவில்லை, அவனிடம் என் ஜம்பம் பலிக்குமா? குடுக்கையைப் பிடுங்கிக் கொண்டான். உதட்டில் குடுக்கையை வைத்தான். ருசி பார்த்தான். அவனுக்கு ரொம்பவும் பிடித்துவிட்டது. திராட்சைரசம். கடைசிச் சொட்டு இருந்த வரையில் குடுக்கையிலிருந்த திராட்சை ரசத்தை மண்டிவிட்டான்

...ட்டுத் தோழர்களிடம் விட்...ப் போவதாகச் சொல்லிவிட்டுப் ...பட்டான். வீட்டுக்குப்போன ... தாத்தாவிடம் காட்டில் நடந்த ...ச் சொன்னான். உடனே கண்ண...ன் தாத்தா போலீஸ் ஸ்டேஷ...க்குப் போனார். ரிப்போர்ட் செய்...ர். சப் இன்ஸ்பெக்டர் சரவணப் பிள்ளை கண்ணனைக் கட்டி அணைத்துக் கொண்டார். தன் மகனுக்காக வாங்கி வைத்திருந்த ரொட்டியைக் கொடுத்தார். தின்றான். ஷண்முகத்திற்காக கொஞ்சம் வைத்துக் கொண்டான். சப் இன்ஸ்பெக்டர் கண்ணனையும், தாத்தாவையும் ஜீப் காரில் ஏறச் சொன்னார். நாலைந்து போலீஸ் ஜவான்களும் ஜீப் காரில், ஏறினார்கள். சப் இன்ஸ்பெக்டர் காரை ஓட்டுகிறார். ஜீப் கார் காட்டோரம் போயிற்று. இறங்கினார்கள். காட்டிற்குள்ளே போனார்கள். இடத்தைக் காண்பித்தான். பிறகு கண்ணனையும் தாத்தாவையும் அவர்கள் வீட்டில் கொண்டுபோய் விட்டனர். இன்ஸ்பெக்டர், ஜவான்களும், போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் விட்டார்கள்.

இரவு 12 மணி. ஜவான்களுடன் போலீஸ் இன்ஸ்பெக்டர் காட்டிற்கு வந்தார். புதர்களிலே ஒளிந்திருந்தார்கள்.

4 மணிக்கு திருடர்கள் வந்தார்கள். வெட்டிப் போட்ட குழியை அந்த இடத்தில் காணுமல் தவித்தார்கள் கையிலோ ஒரு டிரங் பெட்டி இருக்கிறது. அந்த சமயத்தில் ஜவான்கள் அவர்கள் இருவரையும் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். அகப்பட்டுக் கொண்டார்கள். திருடர்கள். திருடர்களை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் விட்டார்கள்.

அடுத்தநாள் காலை 6 மணிக்கு ஜீப் காரில் சப் இன்ஸ்பெக்டர் புறப்படப் போகிறார். கார் கிளம்பும் சமயத்தில் எதிரே ஒரு பெரிய கார் வந்தது. ஜீப் காரை நிறுத்திவிட்டு எதிரே வரும் காரைக் கவனித்தார் இன்ஸ்பெக்டர். மிராசுதாரின் கார்தான் அது. அந்தக் காரும் போலீஸ் ஸ்டேஷனில் நின்றது. மிராசுதார் வண்டியை விட்டு இறங்கினார். இறங்கினதும், ஜீப்காரின் பக்கத்திலே வந்து இன்ஸ்பெக்டர் சார்வாள் அவசரமாக எங்கேயும் போகிறீர்களா! என்றார் மிராசுதார். "தங்கள் வீட்டுக்குத்தான் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்" என்றார் இன்ஸ்பெக்டர்.

'திருட்டுப்போன விஷயம் தெரியுமோ"

"ஆகா தெரியுமே. கண்டுபிடித்தாய் விட்டது. திருடர்கள் ஸ்டேஷனில் இருக்கிறார்கள். உங்களுடைய சொத்தும் அப்படியே அகப்பட்டு விட்டது" என்றார் இன்ஸ்பெக்டர்.

"நாங்களே சற்றுநேரம் முன்னர் தானே திருட்டுப் போனதை அறிந்தோம். உங்களுக்கு அதற்குள் திருட்டுபோனது தெரிந்து. எப்படி கண்டுபிடித்தீர்கள்" என்றார் மிராசுதார்.

"உங்கள் வீட்டில் திருட்டுப் போவதற்கு முன்னாலே எங்களுக்குத் தகவல் தெரியுமே!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்' என்றார் மிராசுதார்.

"சொல்லுகிறேன் கேளுங்கள் மதுரையிலிருந்து வந்த ஒரு சிறு பையன் ஒருவனால் நாங்கள் அறிய முடிந்தது" என்றார் இன்ஸ்பெக்டர்.

"சிறு பையனா திருடினான்?"

"இல்லை. அவன்தான் எங்களுக்குத் தகவல் கொடுத்தான்"

"சரி அவன் இருக்கும் இடத்திற்குப் போகலாமா?"



தெரியுமா?

ஏழு அவுன்சு பால்

உலகத்தில் உள்ள கால் நடைகளில் மூன்றில் ஒரு பாகம் நம் நாட்டில் இருக்கிறது. அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக நம் நாட்டில் தான் அதிகமான பால் கிடைக்கிறது. எவ்வளவு தான் பால் கிடைத்தாலும் சராசரி பார்க்கும்போது ஒவ்வொருவருக்கும் ஏழு அவுன்சு பால் தான் கிடைக்கிறது, நியூஜிலாந்தில் 56 அவுன்சு, ஸ்விட்சர்லாந்து 49 அவுன்சு, ஆஸ்திரேலியாவில் 45 அவுன்சு, பிரிட்டன், டென்மார்க்கில் 40 அவுன்சு, அமெரிக்காவில் 35 அவுன்சு வீதம் ஒவ்வொருவருக்கும் பால் கிடைக்கிறது. இந்தியாவில் மொத்தத்தில் பார்க்கும்போது ஆள் ஒன்றுக்கு 7 அவுன்சு பால் கிடைக்கிறது ஆனாலும் நம்மாகாணத்தில் ஆள் ஒன்றுக்கு சராசரி சுமார் அரை ஆழாக்குப் பால் தான் கிடைக்கிறது. ஆழாக்கு ஒன்றுக்கு 8 அவுன்சு.

"ஓ அதற்கென்ன போகலாம் என்றார் இன்ஸ்பெக்டர். இன்ஸ்பெக்டரும் மிராசுதாரும் கண்ணனின் தாத்தா வீட்டிற்கு வந்தார்கள். காட்டில் நடந்த விஷயத்தை மிராசுதாரிடம் அப்படியே சொன்னான் கண்ணன். மிராசுதார் ஆச்சரியமடைந்தார். உடனே மிராசுதார் கண்ணனைப் பார்த்து " நீ யார்? எந்த ஊர்? அப்பா பெயர் என்ன? வேலை என்ன?" என்றெல்லாம் கேட்டார். எல்லாவற்றிற்கும் கண்ணன் "பட் பட்" என்று பதில் சொன்னான். அதற்குள் இன்ஸ்பெக்டர். "மிராசுதார்வாள் புறப்படலாமா?" என்றார். மிராசுதாரும் இன்ஸ்பெக்டரும் புறப்பட்டு விட்டார்கள்.

அவர்கள் புறப்பட்டதும் கண்ணன் "மிராசுதார் நன்றிகூடத் தெரிவிக்கவில்லையே" என்று நினைத்தான்.

இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. மதுரைக்கு வந்து விட்டான் கண்ணன்.

அன்று தினம் அவன் அப்பாவிற்கு ஒரு கடிதம் வந்தது. அதில் 'அன்பார்ந்த ஐயா, தங்கள் பையன் கண்ணனால் ஐந்து லட்ச ரூபாய் பெறுமானமுள்ள நகைகள் தஸ்தாவேஜுடன் கிடைத்தன. அதற்காக அவனுக்கு ஏதாவது செய்யவேண்டுமென்று எண்ணி இத்துடன் ரூ 5000-த்துக்கு டிராப்டு ஒன்று அனுப்பியிருக்கிறேன். இந்த ரூபாய் ஐயாயிரத்தையும் அவனுடைய படிப்புக்காக செலவிடுங்கள். தங்கள் பையன் பெரிய அறிவாளியாகவும், செல்வனாகவும் வரவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன். நமஸ்காரம்: கந்தசாமிபிள்ளை மிராசுதார்' என்று எழுதியிருந்தது. ●

நீல ரிப்பன்

நா. வேலாயுதம்

"ஐயோ, அம்மா! இங்குவந்து பாரேன்'' என்று கத்தினாள் சரோஜா. அவள் கூக்குரலைக் கேட்டு சமையல் அறையிலிருந்த அம்மா முற்றத்திற்கு ஓடி வந்தாள். அங்கு அவள் கண்டகாட்சி:

சரோஜாவின் பின்னலைப்பிடித்து இழுத்துக் கொண்டிருந்தான் முத்து. வலி பொறுக்க முடியாமல் சரோஜா அழுது கொண்டிருந்தாள்.

அதைப்பார்த்த அம்மாவின் கண்களில் நெருப்புப்பொறிபறந்தது. விடுவிடுவென்று போய் முத்துவின் முதுகில் ஒருஅடி வைத்தாள், 'அவளை விடுகிறாயா இல்லையா?' என்று கேட்டுக்கொண்டே.

அவ்வளவுதான். முத்து தன் பிடியை விட்டான். ஆனால், அம்மாவைக் குர் என்று பார்த்தான். கண் கொட்டாமல் பார்த்தான்.

"உன் செல்ல மகளை மட்டும் அடிக்காதே,'' என்றான் முத்து. அவன் வாயிலிருந்து ஆத்திரத்தோடு குதித்து வந்தன இந்தச் சொற்கள்.

அம்மா சிரித்தாள். பிறகு, "நீ மட்டும் யார் மகனாம்?'' என்றாள்.

"நான் உன் மகனாய் இருந்தால் என்னை மட்டும் அடிப்பாயா?''

"நீ அக்ரமம் செய்தால் அடிக்காமல் என்ன செய்வது?'' என்றாள் அம்மா.

"உன் மகள் மட்டும் நான் 'எக்ஸிபிஷனுக்குப்போய்' வாங்கி வந்த ரிப்பனைக் கேட்காமல் எடுக்கலாமோ?'' என்றான் முத்து.

"இல்லேம்மா, அவன்தான் தந்தான்'' என்று இடைமறித்தாள் சரோஜா.

"சீ போக்கிரி, பொய் வேறே சொல்றே'' என்று கத்தியவாறு அவள் கன்னத்தில் பளீரென்று அறை வைத்து விட்டு, அடுத்த நிமிஷம் வீதியில் குதித்து ஓடினான் முத்து.

கன்னத்தைப் பிடித்துக் கொண்டு 'கோ' வென்று அழுதாள் சரோஜா.

"போக்கிரிப்பயல். வரட்டும் சொல்றேன். நீ அழாதே'' என்று அவளைச் சமாதானப்படுத்தினாள் அம்மா.

மணி பன்னிரெண்டு. வெய்யில் கொளுத்தியது. வாயிலில் நின்றபடி தெருவையே பார்த்துக் கொண்டிருந்தாள் அம்மா. அவள் கண்கள் கலங்கி இருந்தன.

காலையில் ஓடின முத்து இன்னும் சாப்பிட வரவில்லை. அம்மா முத்துவின் சிநேகிதர் வீட்டுக்கெல்லாம் வேலைக்காரனைப்போய் பார்த்துவரச் சொன்னாள். ஊம்... எங்குமே முத்து இல்லை.

மணி ஒன்றாகியது. இரண்டாகியது. முத்து வரவே இல்லை. அம்மா கவலையோடு வாயில் படியிலேயே நின்றாள்.

"சனியன், எப்பவாவது வந்து தொலையட்டும். நீ போ உள்ளே'' என்று கர்ச்சித்தார் அப்பா. முத்துவை எப்போதுமே பிடிக்காது அவருக்கு.

மாலை மணி ஐந்து.

மெரீனா பீச்சில் சுற்றிக்கொண்டிருந்தான் முத்து. சிறிது தூரத்தில் பட்டம்விட்டுக்கொண்டிருந்த பாலுவைக்கண்டதும் அவனிடம் சென்றான்.

"டேய், என்னடா இப்படி இருக்கே?'' என்று கேட்டான் பாலு.

"பைத்தியம் மாதிரி இருக்கான்!'' என்று சொல்லிச்சிரித்தாள் பாலுவினருகில் நின்ற அவன் தங்கை, தங்கம்.

முத்துவிற்கு அதைக்கேட்டதும் வெட்கமாகப் போய்விட்டது.

"சரி; நீங்கள் இருவரும் எங்கே கிளம்பினீர்கள்?'' என்றான் முத்து.

"இன்று ஞாயிற்றுக்கிழமை தானே. குஷியா பீச்சிற்குப் போவோமே என்று வந்தோம்'' என்றான் பாலு.

"உன் தங்கை வரலையா?'' என்றாள் தங்கம்.

அவள் அப்படிக்கேட்டதும் முத்துவிற்கு சரோஜாவின் ஞாபகம் வந்தது. 'சீ. நாமும் இருக்கிறோமே அவளோடு அடித்துக் கொண்டு'' என்று நினைத்தான். சண்டை இல்லாமலிருந்தால் எவ்வளவு ஆனந்தமாய் இருக்கலாம்

பீச்சில் அவர்களோடு சிறிது நேரம் விளையாடினான் முத்து. அவன் மனம்மட்டும் சரோஜாவையே நினைத்துக்கொண்டிருந்தது.

இரவு மணி ஏழு.

ஹாலில் பாடம் படித்துக் கொண்டிருந்தாள் சரோஜா. முத்து மெல்லச்சென்று அவள் கண்களைப் பொத்தினான்.

"யாரது?'' என்று கேட்டுக் கொண்டு திரும்பிய சரோஜாவிற்கு முத்துவைக்கண்டதும் கோபம் வந்தது.

அம்பியின் அதிர்ஷ்டம்

நடனம்

(முன் இதழ் தொடர்ச்சி)

ஏதோ ரொட்டிகளை எடுத்து, தகரங்களில் அடுக்கிக் கொண்டிருந்தாள் சோமுவைப் பார்த்தாள். "தம்பி! என்ன கொண்டு வந்திருக்கிறாய்" என்றாள்.

"இது ஒரு இரும்புப் படிக்கல். ரோட்டில் கிடந்தது. காய்கறிக்காரக் கன்னியப்பன் மனைவியிடம் கேட்டேன். அவளுடையதில்லை என்றாள். உங்களுடையதா என்று விசாரிக்கச் சொன்னாள். அதனால்தான் ரொம்ப சிரமப்பட்டு, இங்கே வந்தேன்" என்றான் அம்பி. ரொட்டிக்காரி, தன் தராசு படிக்கல் சரியாய் இருக்கிறதா என்று கவனித்தாள். எல்லாம் சரியாய் இருந்தன.

"தம்பி! என் கடையிலுள்ள தூக்குக் குண்டுகள் எல்லாம் உள்ளன. இவ்வளவு சிரமப்பட்டு, இதைத் தூக்கிக் கொண்டு வந்திருக்கிறாயே பாவம். ரொம்பக் களைத்திருக்கிறாய். உட்காரு, இதோ ரொட்டி இருக்கிறது. வேண்டு மட்டும் சாப்பிடு. வீதியில்கிடக்கும் பிறருடைய சாமான்களை எடுத்து வந்து, சிரமப்பட்டு உடையவரிடம் நீ சேர்க்க முயற்சிக்கிறாய். உன்னைப் போன்ற நல்ல பையன்களைத்தான் நான் பார்க்கப் பிரியப்படுகிறேன்" என்றாள் ரொட்டிக் கடைக்காரி.

"அம்மா! ரொம்ப வந்தனம். நான் கொஞ்ச நேரத்துக்கு முன்புதான் கன்னியப்பன் வீட்டில் வயிறு நிறைய தோசை தின்று வந்தேன், பசி இல்லை. இனிவயிறு கொள்ளாது' என்றான் சோமு, அதற்கு அவள்' "தம்பி! இதோ ஒரு கடுதாசிப் பை., அதில் வேண்டுமட்டும் ரொட்டிகளை எடுத்துக்கொள். வீட்டுக்குக் கொண்டு போ. பசிக்கும்போது சாப்பிடு. எனக்கு ரொம்ப ரொம்ப ஆசை" என்றாள்.

அம்பி, ரொட்டியை வேண்டு மட்டும் எடுத்துக் கொண்டான். சட்டைப் பைகளில் திணித்தான். குண்டைத் தோளில் தூக்கி வைத்தான். "அம்மா! இந்தக் குண்டு யாருடையதாய் இருக்கும்? சொல்லமாட்டாயா?" என்றான். "தம்பி! இந்தக் குண்டு புதிதாய் இருக்கிறது. இதே வீதியில் கொஞ்ச தூரம் தள்ளி, ஒரு இரும்புக் கடைக்காரன் இருக்கிறான். அவன் புதிய தராசு, படிக்கல் முதலியவைகளைத் தருவித்து விற்பது வழக்கம். நீ அவனிடம் கேட்டால், இது யாருடையது என்று சொல்வான். அந்தக் கடைக்காரன் மகன், புதிய தராசு படிக்கல்களை ஒரு தள்ளு வண்டியில் வைத்து, இன்று வியாபாரம் செய்யப் போனான். அதை நான் பார்த்தேன். அவன்தான் இந்தப் படிக்கல்லை வண்டியிலிருந்து நழுவவிட்டிருப்பான் என்று சந்தேகிக்கிறேன். அங்கே போய்ப்பார்" என்றாள் ரொட்டிக்காரி.

சோமு புறப்பட்டான். தள்ளாடித் தவித்து, இரும்புக் கடைக்குப் போய்ச் சேர்ந்தான். குண்டைத் தோளிலிருந்து இறக்கி தொப்பென்று போட்டான். பக்கத்திலிருந்த பெஞ்சியில் உட்கார்ந்தான். இரும்புக் கடைக்காரன், அப்பொழுது ஏதோ சாமான்களைத் துடைத்துக் கொண்டிருந்தான். சோமு கொண்டுவந்து போட்ட, இரும்புக் குண்டைப் பார்த்ததும், அவனுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. ஆச்சரியம் அடைந்தான்.

"தம்பி! இது உனக்கு எங்கிருந்து கிடைத்தது? எனக்கு ஒரு மகன் இருக்கிறான். அக்கறை இல்லாதவன் வேலையில் கவனமில்லாதவன் வியாபாரத்திற்கு இன்று காலையில் வெளியே போயிருந்தான். இந்த எட்டு வீசைப் படிக்கல்லை, எங்கேயோ போட்டுவிட்டு வந்து விழித்தான். இது, ஒரு எள்ளு வியாபாரிக்காக, ஆர்டர் கொடுத்து, புதிதாய்ச் செய்தது. அவர் அடிக்கடி வந்து கேட்கிறார். என் மகன், தொலைத்து விட்டான் என்று கேள்விப்பட்டதும் ரொம்ப கோபித்தார்" என்றான் இரும்பு வியாபாரி.

"ஐயா! இந்தப் படிக்கல் உங்களுடைய சாமான் என்று அறிந்து, ஆனந்தமடைந்தேன். ஊரெல்லாம் இந்தக் கனத்தைச் சுமந்து சுற்றி வருகிறேன்.

"தம்பி! உன்னைப் போ[illegible] நல்ல குணசாலியை நான் எங[illegible] இதுவரை பார்த்ததில்லை. வே[illegible] பையன்களாய் இருந்தால் கனமா[illegible] இந்தத் தூக்குக் குண்டை சும[illegible] இங்கு வந்திருக்க மாட்டார்க[illegible] உன்னைப் பார்த்தால், ஒரு ஏழைப் பையனைப் போல் தோன்றுகிறது. உனக்கு எப்பொழுதாவது வேலை தேவையானால், இங்கே வா, வேலை தருகிறேன். கவலைப்படாதே. உன் யோக்கியத் தன்மையைப் பாராட்டுகிறேன். உன் பள்ளிக்கூட லீவு நாட்களில் இங்கு வா. என்னிடம் வந்து வேலை பார். உன்னால் எளிதாய்ப் பார்க்கக் கூடிய வேலையைத் தருகிறேன். அதற்கு நல்ல சம்பளமும் கொடுக்கிறேன். என்றான் இரும்புக் கடைக்காரன்.

சோமுவின் சந்தோஷத்தைகேட்கவாவேண்டும்? "ஐயா! இரும்புக் கடை முதலாளி அவர்களே! உங்கள் ஆதரவான வார்த்தை, என்னை ஒரே ஆனந்தமாக்கி விட்டது! நீங்கள் தரும் வேலையை ஏற்று, அன்புடனும் அக்கறையுடனும் பார்ப்பேன். தாங்கள் தரும் சம்பளம், எங்கள் வீட்டுச் செலவிற்கு உதவியாய் இருக்கும். என் தந்தையும் இப்பொழுது வேலையில்லாமல் இருந்து வருகிறார்" என்றான் சோமு.

அதற்கு இரும்புக்கடை முதலாளி "தம்பி ஒன்றுக்கும் யோசனை செய்யாதே. நன்றாய்ப்படி. படிப்பு முடிந்ததும் என்னிடம் வா. உன்னை உடனே வேலைக்குச் சேர்த்துக் கொள்ளுகிறேன். எனக்கும் வயதாகிவிட்டது. ஊக்கமும், சுறுசுறுப்பும், உழைப்பாளியுமான ஒரு மானேஜரிடம் என் கடைக் காரியங்களை ஒப்படைத்து விட்டு, ஓய்வு எடுத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். என் மகன் தொழிலுக்கு லாயக்கில்லை. எங்கு போனாலும், கொடுத்த சாமான்களைக் கெட்டுப்போக்கி விட்டேவருவான்" என்றான்.

இதைக் கேட்டதும், சோமுவின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. ஏன்? பள்ளிக்கூட லீவு நாட்களிலோ! வேலை. அதற்குச் சம்பளம். பள்ளிக்கூடப் படிப்புமுடிந்த பின்பு, நிரந்தரமான உத்தியோகம்! எங்கும் வேலையில்லாத் ! திண்டாட்டம் தாண்டவம் ஆடும்போது, சோமுவிற்கு சுக்கிர தசை அடித்ததல்லவா?

"ஐயா இரும்புக் கடை எஜமானே! நேரமாகிறது. இந்தத் தூக்குக் குண்டை எ[illegible] வி[illegible]பாரியிடம்

ப : மாங்காய் சாப்பிட்டிருப்பாய். அல்லது ஐஸ் புருட் சாப்பிட்டிருப்பாய். அதனுல்தான் பல் கூசுகிறது. கொஞ்சம் உப்பைத் தண்ணீரில் போடு. உப்பு கரைந்ததும் வாய் கொப்பளிக்கவும். நாலைந்து நாள் தினம் இரண்டு முறை கொப்பளித்தால் உன் பல்வலி குணமாகி விடும். காலையில் பல் விளக்கும்போது, செங்கல் பொடியைப்போட்டு விளக்காதே. கருவப்பட்டை, அல்லது கல்நார் பல்பொடியை உபயோகி. பல்வலி அடியோடு ஒழியும்.

ரகுநாதன், கொழும்பு.

கேள்வி : நான் சென்னை ராமகிருஷ்ண மிஷன் உயர்தரப் பள்ளியில் சேர்ந்து படிக்க விரும்புகிறேன். அந்தப் பாடசாலையில் எப்பொழுது பரிட்சை முடிந்து, எப்பொழுது புதிதாகச்சேரும் பையன்களைச் சேர்த்துக் கொள்வார்கள். என்று விசாரித்து எழுதும் படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

பதில் : தம்பி ! ராமகிருஷ்ண மிஷன் ஸ்டுடெண்ட்ஸ் ஹோம், மயிலாப்பூர் சென்னை என்ற விலாசத்துக்கு ஒரு கடிதம் எழுது. உடனே பதில் எழுதுவார்கள். உனக்கு வேண்டிய விபரங்கள் கிடைக்கும்.

அணில் தம்பி, ஓட்டேரி.

கே : நான் அணில் குடியரசு மலர் வாங்கவில்லை. ஏன் என்றால் எங்கள் ஏஜண்டிடம் அணில் குடியரசு மலர் சீக்கிரமாக ஆகி விட்டது. அதை வாங்க முடியவில்லை. நான் கடலோடியின் கதையை சேர்ப்பதால் குடியரசுமலர் நிச்சயம் அனுப்ப வேண்டும். எவ்வளவு விலை?

ப : தம்பி உன் கார்டில் உன் முழு விலாசம் எழுத வில்லையே. குடியரசு மலருக்காக எட்டணு தபால் பில்லைகள் அனுப்புக. உனக்கு குடியரசு மலர் உடனே கிடைக்கும்.

பி. எஸ். அப்பாத்துரை,
நாராயணன்சாவடி.

கே : எனக்கு சுமார் பதினைந்து நாட்களாக ஒரு பல் விரல் பட்டால்கூட கூசுகிறது? அதற்கு என்ன செய்வது?

ஆசிரியர் : வை. கோவிந்தன்

சென்னை—2, பாப்பா பிரசில் ஜெ. செல்லையாவால் அச்சிடப் பெற்று, வை. கோவிந்தனுல் வெளியிடப்பெறுகிறது.

வருட சந்தா ரூ. மூன்று.
இரண்டு வருடங்களுக்கு
ரூ. ஐந்து.

ச [illegible] சென்னை—14

காதைப் பாருங்கள்

அமெரிக்காவில் இல்லினுயிஸ் என்ற பட்டணத்தில், போன வருஷம் ஒரு பெரிய பொருட் காட்சி நடத்தினுர்கள். அதில் எத்தனையோ விதவிதமான காட்சி பொருள்கள் வைத்திருந்தார்கள். விவசாயம், கைத்தொழில், ரசாயனம், விஞ்ஞானம், வைத்தியம், யந்திரசாதனம், எல்லாம் அபிவிருத்தி அடைந்திருப்பதைக் காட்டினுர்கள். மனித வளர்ச்சிக்கு வேண்டிய சாதனங்கள் என்னென்ன உண்டோ, அவ்வளவும், வேடிக்கை பார்க்க வந்தவர்களிடம் விளக்கிச் சொன்னுர்கள். சுமார் 20 லட்சம் பேர்கள் அந்த வேடிக்கையைப் பார்க்க வந்தார்கள். அதில் அநேகமான பேர்கள் மாணவர்களே. அந்தக் காட்சியில் வைத்தியப் பகுதி ஒன்று இருந்தது. அதில் உடலின் ஒவ்வொரு அவயவத்தைப் பற்றியும் உதாரணத்துடன் விளக்கிக் காட்டினுர்கள். இதோ, ஒரு பெரிய காது. அது ஒரு ஆளுக்குமேல் உயரம். அவ்வளவு பெரிய காது. ரப்பரில் செய்தது. காதுக்குள்ளே என்னென்ன் உறுப்புக்கள் இருக்கின்றன, காதில் ஜவ்வு எங்கே இருக்கிறது, எப்படிக் காது கேட்கிறது, நரம்புகள் எங்கே ஓடுகின்றன, என்பதை எல்லாம், ஒரு வைத்தியக் கல்லூரி மாணவன் விளக்கிச் சொல்லுகிறுன்.